©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 254A] சென்னை, திங்கட்கிழமை, ஆகஸ்ட் 8, 2011
ஆடி 23, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011.**

***1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

**2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1) –ஆம் உட்பிரிவில் “முப்பத்து ஐந்து ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “முப்பத்து ஐந்து ஆண்டுகள் எட்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு **1976–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி முதல் நிலையாக இரண்டு ஆண்டு கால அளவுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அத் தனி அலுவலர்களின் நியமனக் கால அளவானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்து அது, **2011–**ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **9–**ஆம் நாளன்று முடிவடைவதாக இருக்கிறது.

**2.** அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்கான தேர்தல்கள் முறையே, **2007–**ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் **7–**ஆம் நாளன்றும், **2007–**ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் **11–**ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றுள்ளனவோ அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து, அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

**3.** எனவே, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இன்னமும் அதிக காலம் ஆகும். எனவே அரசானது, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களின் நியமனக் கால அளவை **2011–**ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **9–**ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு திங்கள் கால அளவு ஒன்றுக்கு நீட்டிப்பது எனவும், மேற்சொன்ன சட்டத்தை அந்நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

4. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**செல்லூர். கே. ராஜூ,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.